

EISSN 2456-5571



AN ONLINE, PEER REVIEWED, REFEREED AND QUARTERLY JOURNAL

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 7 | SPECIAL ISSUE 1 | MAY 2023 | E-ISSN: 2456-5571

அகத்திய மாமுனிவர் கலை இலக்கியப் பண்பாட்டு
ஆய்வு மையம், அகஸ்தீஸ்வரம்
மற்றும்
கவிஞன் பதிப்பகம், முகிலை
வழங்கும்
சிறப்பிதழ் பொருண்மை

# பன்முகநோக்கில் அகத்தியரின் படைப்புகள்

சிறப்பிதழ் தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் பா. ஸ்ரீரெங்கநாதன் (கவிஞர் முகிலை பாஸ்ரீ)**

**சு. பால்மோகன் (உதவிப் பேராசிரியர்)**

**முனைவர் த. முஸ்தபா**

11 அகத்தியர் அருளிய ஓலைச்சுவடியில் வாதநோயின் கூறுகளும், மருந்துகளும் 49
**முனைவர். தே. ஜெய சோபியா**

12 அகத்தியர் வாழ்வும் வாழ்வியல் முறைகளும் 53
**முனைவர் மு. நாகராஜன்**

13 அகத்தியர் மகான்மனிதனுக்கு வழங்கிய மதிப்புரை 60
**முனைவர் க. அலமேலுமங்கை**

14 அகஸ்தியரின் உடற்கூற்றுச் சிந்தனைகள் 65
**முனைவர். பா. சிங்காரவேலன்**

15 அகத்தியரின் சுரம் நீக்கும் மருத்துவ முறைகள் 70
**முனைவர் ஜெ. ஜெயசாந்தி**

16 அகத்தியரோடு சித்தர்கள் பரிபாஷை 75
**முனைவர். அ. ஜான்போஸ்கோ**

17 அகத்தியரின் மூலிகை மருத்துவம் 79
**முனைவர். சி. வி. சைலா**

18 அகத்தியர் கும்மி கூறும் பெண்களுக்கான மருத்துவம் 82
**முனைவர் மு. சாந்தினி**

19 சித்த மருத்துவர் - அகத்தியர் 86
**திருமதி. ச. லீமா**

20 சித்த மருத்துவ முறைகள் 93
**க. சிந்து**

21 அகத்தியர் வாழ்வும் வாக்கும் 97
**முனைவர் கே. இரா.கமலாமுருகன்**

22 அகத்தியம் பேசும் மூலிகை மருத்துவம் 102
**முனைவர் த. தனலெட்சுமி**

23 அகத்தியர் மருத்துவத்தில் பித்தம் 107
**முனைவர் வே. தனபாக்கியலட்சுமி**

24 அகத்தியரின் சித்த மருத்துவம் 112
**முனைவர் ஆ. உஷா**

25 அகத்தியர் திரைப்படத்தில் புராணச் செய்திகள் 115
**முனைவர் பா. நேருஜி**

26 'அகத்தியர் நாடி' கூறும் உண்மை
**ஜெ. கார்மல் ஷர்மிளா**

27 " By the Name of "Agathiyar Provide Texts" [illegible]
**Dr. T. Musthafa**

28 Managing Commercial Business Through Tamil Classical Language Towards Promoting Agattiar Siddha Traditional Medicine [illegible]
**Dr. S. Nagarajan &**
**Dr. R. Meenakshi**

29 ஈசனால் அருள் பெற்ற அகத்தியர் 135
**முனைவர் ஆ.பா. இராமலெட்சுமி**

30 அகத்தியமா முனியின் மருத்துவம் 138
**ஆ. ராஜேஷ்**

31 அகத்தியர் மருத்துவம் 142
**முனைவர். சு. ஏஞ்சல் லதா**

32 அகத்தியர் பாடல்களில் கலைச்சொல்வளம் 148
**சு. பால்மோகன்**

33 அகத்தியரும் அகத்தியர்களும் 152
**முனைவர் கு.காமராஜ்**

34 அகத்தியரும் சித்த மருத்துவமும் 157
**வி. செல்வி**

35 அகத்தியரும் குறியீட்டுமொழியும் 161
**முனைவர்.மு.ச.இசக்கியம்மாள்**

36 அகத்தியர் கும்மியும் அருமருந்தும் 164
**முனைவர் அ.பாரதிராணி**

37 பஞ்ச காவிய நிகண்டில் இடம்பெறும் மருத்துவ அறிவியல் 169
**முனைவர் தே. தேன்மொழி**

38 அகத்தியர் - பெயர் ஆராய்ச்சி 176
**முனைவர் பா. ஸ்ரீரெங்கநாதன்**

39 ஒப்பீட்டு நோக்கில் அகத்தியரின் நூல்களும் தொல்காப்பியமும் 181
**முனைவர். சு. அபிலாசுந்தரி**

40 அகத்தியர் கண்ட மெய்ப்பொருள் 187
**முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி**

# அகத்தியர் மருத்துவம்

முனைவர். சு. ஏந்தல்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி, காயல்பட்டினம்

**Abstract**

*Agasthiyar was a Indian sage. He was the chief exponent of Tamil medicine system. He learnt Tamil and experimented medicine in Pothigai hills. He cures small to big diseases by using simple herbs. His works on preparation of universal salt ( muppu and amuri) for both alchemical and medicine purpose is of high value*

**கலைச்சொற்கள்:** பற்பம் - புடம் போட்டு பெறப்படும் வெண்மை நிறப்பொடி, சமூலம் - அனைத்து பாகங்களும், சுண்ணம் - சுண்ணாம்பு, குன்மம் - செரிமானமின்மை, கற்பம் - ஆயுள் வளரச் செய்யும் மருந்து, கந்தி – கந்தகம் (sulphur), புரணி – மரத்தின் தோல் (பட்டை)

அகத்தியர் ஆரியக் குலத்தில் பிறந்து, வடநாட்டில் இமயமலையில் வசித்தவர். இவர் சிவபெருமானால் விந்திய மலையைக் கடந்து தென்னாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டவர். சகல கலைகளிலும் சிறந்து விளங்கியவர். மதிநுட்பம் உடையவர். இவர் சித்த மருத்துவம், ஆயுள்வேத மருத்துவமுறை வைத்தியங்களால் தமிழ் மக்களோடு ஒன்றி விட்டவர்.

## சித்த மருத்துவம்

மிகப் பழமையான சித்த மருத்துவத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாய் இருந்தவர்கள் சித்தர்களும் அவர்களின் பாடல்களும் ஆகும். சித்த மருத்துவம் தமிழ் மண்ணில் தோன்றிய மிகவும் தொன்மையான மருத்துவமுறை. சித்தர்களின் பாடல்களையே மூலமாகவும் தமிழரின் மூலநோய்களைக் கொண்டும் தழைத்து திராவிட மருத்துவம். (மு. பசுமலையரசு, செந்தமிழும் சித்த மருத்துவமும். பக்.17)

சித்த மருத்துவம் யோகம், ஞானம், வைத்தியம், மந்திரம், தந்திரம் போன்ற பலத் துறைப் பாடல்களைக் கொண்டது. இக்கட்டுரையில் அகத்தியரின் வைத்தியமுறை மட்டுமே இடம் பெறுகின்றது.

## ஆயுள்வேத மருத்துவம்

உடல்நிலையின் தன்மையை அறிந்து அதற்கேற்ப மருந்தின் அளவைத் தெரிந்து கொண்டு மருத்துவம் அளிப்பது ஆயுள்வேத மருத்துவமுறை ஆகும். இதன் அடிப்படை, சூட்டைச் சூட்டாலும் குளிரைக் குளிராலும் தணிப்பதாகும். ஆயுள்வேதம் என்பதே ஆயுர்வேதம் என மருவியுள்ளது. இது வாழ்நாளை நீட்டிக்கச் செய்யக்கூடிய வழிவகைகளைக் கூறும் இந்திய மருத்துவமாகும்.

## நூல் குறிப்பு

அகத்தியர் வைத்தியம் 108 என்ற நூல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் ஓலைச் சுவடியில் இருந்து பதிப்பிக்கப்பட்டது. இந்நூலின் பதிப்பாசிரியர் முனைவர். வே...

...மாதவன் ஆவார். இந்நூலில் ...சித்த மருத்துவத்தில் ...யுர்வேத. இலிங்கக்கட்டு, ...பயன்படுத்தப்படுகின்ற இரசமணி, பற்பவகைகள், ...வகைக்கட்டு. கற்ப வகைகள் என்று ...வகைகள். வகைப்பாடல்கள் இடம் ... மருத்துவ ...பெற்றுள்ளன.

இலிங்கக் கட்டு ...சன்னிதோசம், வாயுத் தொல்லை, நெஞ்செரிச்சல், நெஞ்சடைப்பு, பேதி போன்ற ... நோய்களைத் தீர்க்கப் பயன்படுத்தும் ஆயுர்வேதமருந்துகளில் ஒன்று இலிங்கக் கட்டு.

**இலிங்கக் கட்டு செய்முறை**

50 கிராம் எடையுள்ள இலிங்கக்கட்டி எடுத்தால் அதன் சம அளவுக்குச் சாம்பிராணி, கற்பூரம் எடுத்துப் பொடித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கலவையைப் பத்து பங்காகப் பிரித்தெடுக்க வேண்டும்.

ஒவ்வொரு பங்கையும் வேப்ப எண்ணெய் சேர்த்து அரைத்துக் காடாத்துணியில் வைத்துக் கட்ட வேண்டும். பின் காற்று அதிகம் இல்லாத வீட்டின் வெளிப்புறத்தில் ஒரு அகலில் வைத்து இந்தக் கட்டுகளை ஒன்றன் பின் ஒன்றாக எரித்து இலிங்கக் கட்டினைத் தயாரிக்க வேண்டும். இப்படி இலிங்கக் கட்டி செய்வதை,

**"போட்டதனைப் பிசிறியோடுத் தோட்டில் வைத்துப்**
**பொருந்திடவே றோடுகொண்டு மேலே மூடி**
**வாட்டமில்லா தொருசீலை மண்ணுஞ் செய்து**
**வயனமாய்ப் புடம் போடச் சுண்ண மாகும்**
**சேட்டமதாய் இலிங்கத்தின் கட்டைக் கேளு**
**செறிவான வராகனொன்று லிங்கம் வாங்கு"**
**(பாடல். 19:1-3)**

என்று அகத்தியர் வைத்தியம் 108 என்ற நூலின் பாடலடிகள் சான்றாகின்றன.

இந்த இலிங்கக் கட்டியைப் பயன்படுத்திப் போக்கும் நோய்களை,

**"போகுமே லிங்கமடா சன்னி தோடம்**
**பொருகாத நெஞ்சடைப்பு வாயு மூச்சு**
**தாகுமே வயிறெரிவு வயிற்றி னூதல்**
**தனியிஞ்சிச் சாறதிலே தாக்கப் போகும்**
**மேகமே சூலையொடு பித்தப் பாண்டு**
**விடபாகம் வயிற்றுவலி குன்மம் சோகை**
**தாகமாய்க் கொடுவேலிக் கசாயத் துண்ணப்**
**பறக்குமடா யின்னும்வெகு ரோகந்தானே"**
**(பாடல். 83)**

என்ற பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

இந்த இலிங்கக் கட்டியைத் தாய்ப்பால் அல்லது பசும்பாலில் ஓர் அரிசி அளவு உரசிக் கொடுத்தால், சன்னிதோசம், நெஞ்செரிச்சல், நெஞ்சடைப்பு, வாயுத் தொல்லை, பேதி போன்ற நோய்கள் காணாமல் போகும்.

இதே இலிங்கக் கட்டியை இஞ்சிச் சாற்றில் கரைத்துக் கொடுத்தால் மேகம், சூலை, பித்தம், வயிற்று வலி போன்ற நோய்கள் அகன்று போகும்.

சித்திர மூலம் கசாயத்தில் இந்த இலிங்கக் கட்டியைக் கரைத்துக் கொடுத்தால், உடலினை வேதனைப் படுத்துகின்ற பல நோய்களுக்குத் தீர்வுண்டாகும்.

திரிகடுக கசாயத்தில் இலிங்கக் கட்டியைக் கரைத்துக் கொடுத்தால் வாயுகோளாறுகள், நுரையீரல் தொடர்பான நோய்கள் அற்றுப்போகும்.

பற்பம்

ஆயுள் வேத வைத்திய முறையில் பற்பம் பலவகைகளில் பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பிட்ட ஒரு நோயைக் குணப்படுத்த மூலிகைகளை அல்லது உலோகங்களின் சாம்பல் மட்டுமே குணப்படுத்த முடியும் என்றால், அந்த மூலிகைகள் அல்லது உலோகங்களை மருத்துவச் சாத்திரப் படி பதப்படுத்தி அல்லது சுட்டெரித்துச் சாம்பலாக்கி மருத்துவ முறையில் தூய்மை செய்த பொடியே பற்பம் எனப்படும். (தமிழ் விக்சனரி)

அகத்தியர் வைத்தியம் 108 என்ற நூலில் அரிதார பற்பம், கந்தி பற்பம், கருவங்கப் பற்பம், கறியுப்பு பற்பம், தங்க பற்பம், தாமிர பற்பம் என்று பல வகையான பற்ப வகைகள் கூறப்பட்டுள்ளன.

**அரிதார பற்பம்**

இதன் மறுபெயர் தாளகம். இது இயற்கையாகவே கிடைக்கின்றது. இந்த அரிதாரம் மஞ்சள், செம்மஞ்சள் நிறத்தில் கிடைக்கின்றன. அரிதாரம், பொன் அரிதாரம் மண் அரிதாரம் என்று இரு வகைப்படும். இவற்றில் மண்அரிதாரமே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. அரிதாரத்தைச் சுத்தம் செய்த பின்பு தான் ஆயுள்வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

**அரிதாரத்தைத் தூய்மை செய்தல்**

சுண்ணாம்புக் கட்டியில் நீருற்றிக் கரைத்துச் சுண்ணாம்பு நீர் எடுக்க வேண்டும். தெளிந்த சுண்ணாம்பு நீரை மண்பானையில் ஊற்ற வேண்டும். அரிதாரத்தை ஒரு காடாத் துணியில் கட்ட வேண்டும்.

இந்த அரிதாரக் கட்டை ஒரு குச்சியில் கட்டி மண்பானையில் உள்ள சுண்ணாம்பு நீரில் மூழ்கி இருக்கும் படி வேண்டும். மண்பானையை அடுப்பில் வைத்து நெருப்பு மூட்ட வேண்டும். எரியும் போது சுண்ணாம்பு நீர் நீல மாறும். நீல நிறமான சுண்ணாம்பு வெண்ணிறமாக மாறும் வரை எரியச்செய்ய வேண்டும். இப்படி சுத்தம் செய்யும் முறையை,

**“செகத்திலுள்ள வைத்தியரே கேளும்**
**திறமான அரிதாரக் கட்டி வாங்கி**
**சுகத்திலே சுண்ணாம்புக் குள்ளே வைத்து**
**சுத்திசெய்து தாளெடுத்து வைத்துக்**
**கொண்டு (79: 1-3)**

என்று அகத்தியர் வைத்தியம் 108 என்ற நூல் குறிப்பிடுகின்றது. இந்த அரிதாரத்தினால் தீரும் நோய்கள் ஏராளம் என்பதை,

**“இகத்திலுள்ள மானிடருக்கு ஈளை காசம்**
**எலிகடிகள் விடபாகம் பித்த பாண்டு**
**மகத்தான குளிர்சுரம்பே நாய்க்க டிக்கும்**
**வகைக்குக்கி யாழத்தில் மருந்து சொல்லே”**

(79: 4.5)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும்,

**“சொல்லக் கேள் சவ்வீரக் கட்டி வாங்கி**
**சுவாசமொடு காசம்நீ ராம்பல் வீக்கம்**
**இல்லைகாண் குன்மமெட்டும் இளைப்பு மில்லை**
**மிகுத்ததொரு நெஞ்சடைப்பு மிளகிற் செய்ய**
**தொல்லைகாண் சூலையொடு வயிற்றிற் கெண்டை**
**தேறாத நீர்க்கோவை நீரா மைக்கும்”**

(80: 1-3)

என்ற பாடல் அடிகளும் கூறுகின்றன.

சுத்தம் செய்யப்பட்ட அரிதாரத்தைப் பயன்படுத்தும் போது சளி, இருமல்,

நரம்பு நோய்கள், ஆகியன குணமாகும். எலிக்கடி, நாய்க்கடி போன்ற முறிக்கும் தன்மை ... மிளகு நீரில் கலந்து ... போது சுவாச காசம், வாத நெஞ்சடைப்பு, சூலை நோய் ... நோய்களும் தீரும்.

### கந்தி பற்பம்

... நெல்லிக்காய், கந்தகம், வெள்ளை வெங்காயச்சாறு, இஞ்சிச்சாறு, மருதம் ...ட்டைச் சாம்பல் அல்லது புளியம் புரணி சாம்பல் ஆகியவை சேர்க்கப்பட்டிருக்கும். கந்திபற்பத்தை நூறு மில்லிகிராம் எண்ணெய் அல்லது நெய்யுடன் தினமும் இருவேளை உட்கொள்ள வேண்டும். என்பதை,

**‘மார்க்கமுறு கந்தகத்தின் பற்பந் தன்னை**
**வகையாகச் சொல்லுகிறேன் மகிழ்ந்து கேளு**
**ஏர்க்கவுறும் பெரியசின்னி யிலையை ரைத்து**
**எளிதாகக் குகைமேற் சில்லும் பண்ணிப்**
**பார்க்கவே யுலரவைத்துக் கந்த கத்தைப்**
**பசுவெண்ணெய் தனிலுருக்கிப் பாலில்**
**சாய்த்து”**

(36:1-4)

என்ற பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன. முறையாகப் பதப்படுத்தப்பட்ட கந்தகப் பற்பத்தைப் பயன்படுத்துவதால் மேகம், சொறி, சிரங்கு, தொழுநோய் ஆகியன நீங்கிச் சௌக்கியமாகலாம்.

### சுண்ணம்

சுண்ணம் என்பது சுண்ணாம்பு. இதன் வேதியல் பெயர் கால்சியம் ஆக்ஸைடு. நாட்டுக்கோழி முட்டை ஓட்டினைச் சேகரிக்க வேண்டும். தண்ணீரில் காஸ்டிங்சோடா உப்பைக் கரைக்க வேண்டும். கரைத்து எடுத்தக் காஸ்டிங் சோடா தண்ணீரில் முட்டை ஓட்டினைப் போட்டு சுத்தம் செய்ய வேண்டும். இரண்டு, மூன்று முறை கழுவி எடுத்து வெயிலில் உலர்த்தி எடுக்க வேண்டும். இந்த முட்டை ஓட்டினைப் பொடி செய்து வினிகர் விட்டு அரைக்க வேண்டும். இப்போது வெண்மையாக இருக்கும். மேலும் இக்கலவையில் எலுமிச்சைச் சாறு விட்டு அரைத்து உலர்த்தி எடுக்க வேண்டும். இப்போது மிகவும் வெண்மையான அண்ட சுண்ணம் கிடைக்கும். இது பல சுண்ண வகைகள் தயாரிப்பதற்கு அடிப்படையாகின்றது.

இப்படி அண்டசுண்ணம் செய்யும் தன்மையை,

**“குன்றாத அண்டத்தின் சுண்ண மிப்போ**
**கூறுகின்றேன் அண்டத்தோ டெடுத்துக்**
**கொண்டு**
**பொன்றாத நாயுருவி யிலையின் சாற்றைப்**
**பிழிந்ததிலே யோடதனை நொறுக்கிப்**
**போடே”** (18:3,4)

என்று அகத்தியர் வைத்தியம் 108 என்ற நூல் கூறுகின்றது.

மேலும் கருவங்க சுண்ணம், பொரிகாரச் சுண்ணம், அப்பிரகச் சுண்ணம், சிப்பிச்சுண்ணம், தாமிர சுண்ணம், துருசு சுண்ணம் என்று பல சுண்ண வகைகளை இந்நூல் எடுத்துக்கூறுகின்றது.

### தூதுவளை கற்பம்

கற்பம் என்பது ஆயுள் வளரச் செய்யும் மருந்து என்று விப்கோ தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி பொருள் தருகின்றது.

தூதுவளை சிறந்த மருத்துவக் குணம் கொண்ட மூலிகை செடி. இதன் பூ, இலை, தண்டு, வேர் என அனைத்துப் பகுதிகளும் மருத்துவக்குணம் கொண்டவை. மூலிகை செடி ஒன்று. ஆனால் பயன்படுத்தும் முறையில் தீரும் நோய்கள் பல.

தூதுவளை சமூலத்தை எடுத்து நிழலில் உலர்த்திப் பொடிசெய்து சிறந்த பசுவின் நெய்யில் கலந்து சாப்பிட்டால், தோலின் நிறம் மாறி அழகு பெறும். இதனை,

**"சொன்னதொரு தூதுவளைச் சமூலந் தன்னைச்**
**சூதாக நிழலுலர்த்திப் பொடித்துக் கொண்டு**
**நன்னயமாய் நறுநெய்யிற் குழைத்துத் தின்ன**
**நன்னிற மாகுமுடலம்"** (93:1,2)

என்ற பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன.

தூதுவளை கற்பத்தைப் பசுவின் பாலில் சேர்த்து உண்டு வந்தால், பருத்த உடல் சிறிய உடலாக மாறுவதை,

**"தூதுவளைச் சமூலந் தன்னை**
**-----**
**பின்னமிலை ஆவின்பால் தன்னிற் கொள்ளப்**
**பெருத்தவுடல் வற்றிவிடும்"** (93:1,3)

என்ற பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தூதுவளை கற்பத்தோடு திப்பிலி பொடியும் சேர்த்து தேனில் குழைத்துச் சாப்பிட்டால் இருமல் தீரும். என்பதற்கு ,

**"சரதமிந்தப் பொடிதேன் திப்பிலி யிரண்டும்**
**சரிசேர்த்துப் பொடித்தருந்த இருமல் தீரும்"**
(94:1)

என்ற பாடலடி சான்றாகின்றது.

தூதுவளை கற்பத்தைக் காலையில் வெறும் வயிற்றில் இளம் வெதுவெதுப்பான வெந்நீரில் கலந்து குடித்தால் பித்த நோய் நீங்கி ...கன்று போவதை,

தூதுவளை கற்பமும் பசுவின் நெய்யும் வேப்பெண்ணெயும் ஒன்றாகக் கலந்து உண்டு வர பதினெட்டு வகையான குஷ்டரோகமும் தீரும். இதனை,

**"பசுவின்நெய் வேப்பெண்ணெய் தன்னி லேனும்**
**பரிந்துண்ணப் பதினெட்டுக் குட்டந் தீரும்."**
(97: 1)

என்னும் பாடலடி எடுத்துக்காட்டுகின்றது.

தூதுவளை மூலிகையை அரைத்துப் பிழிந்து சாறெடுத்து மூன்று நாட்கள் காலை, மாலை மூன்று முதல் ஐந்து துளிகள் வரை நாசியில் விட்டால் தலையில் இருக்கும் சைனஸ் நோய் முழுவதும் பறந்து போகும். இதனை,

**"கூட்டியே நாசிதனிற் பிழிந்தா யானால்**
**குறையான சிரசுநோய் முழுதுந் தீரும்"**
**(98: 1)**

என்னும் பாடலடி வாயிலாக அறியலாகின்றது.

## தொகுப்புரை

இலிங்கக் கட்டியைப் பயன்படுத்திச் செய்ய... ஆயுள்வேத மருந்தினால் சன்னிதோஷ... நெஞ்செரிச்சல், நெஞ்சடைப்பு, வா... தொல்லை, மேகம், பித்தம், சூலை போ... நோய்களுக்குத் தீர்வுண்டாக்கலாம்.

அரிதார பற்பத்தைப் பயன்படு... செய்யும் மருந்தினால் சளி, இரு... சுவாசகாசம், நரம்பு நோ... குளிர்க்காய்ச்சல் குணப்படுத்தப்படுகி... எலிக்கடி, நாய்க்கடி விஷங்... முறியடிக்கப்படுகின்றன.

பலவகையான சுண்ண வ... தயாரிப்பதற்கு அ... அடிப்படையாகின்றது.

Vol. 7 Special Issue 1 May 2023 E-ISSN: 2456-5571

நீரழல் தீரும். பித்த நோய்களும்
குஷ்டரோகமும் தீரும்.

## பயன்படுத்திய நூல்கள்


1. வே.இரா. மாதவன் (பதி) அகத்தியர் வைத்தியம் 108 தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. பசுமலையரசு.மு செந்தமிழும் சித்த மருத்துவமும், கிரிசா பதிப்பகம், பெங்களூர். 1998
3. செம்மொழித் தமிழ் ( பன்னாட்டுத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
4. Raja publications No.10 (Upstairs) Ibrahim Nagar, Tiruchirappalli.
5. C.K.மாணிக்கவாசகம், எளியமுறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்
6. நர்மதா பதிப்பகம் தி.நகர், சென்னை-600017.
7. லிப்கோ தமிழ்- தமிழ்-ஆங்கில அகராதி 2000 தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-600017.